# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு (வெளிவாரி –மீள்பரீட்சை)
## (ஒக்டோபர் - 2017)

## TL 202 தெரிவுசெய்யப்பட்ட பாடநூல்கள்

## Prescribed Texts

LIBRARY
21 FEB 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பின்வருவனவற்றுள் எவையேனும் ***ஐந்து*** வினாக்களுக்கு விடை தருக

---

1. 'புறநானூற்றுப் பாடல்கள் அரசரது வீரத்தையும் கொடையையும் போற்றிப் பாடுவனவாக அமைந்துள்ளன' உமக்குத் தரப்பட்ட புறநானூற்றுப் பாடற் பகுதியை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)
2. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் தனது பக்தி உணர்வை வெளிப்படுத்துமாற்றை விபரிக்குக. (20 புள்ளிகள்)
3. காளமேகப் புலவரின் பாடல்களில் அவரது கவித்துவச் சிறப்பு வெளிப்பட்டு நிற்பதை எடுத்துக் காட்டுக. (20 புள்ளிகள்)
4. கண்ணகி வழக்குரையில் துணைப் பாத்திரங்கள் பெறும் முக்கியத்துவம் பற்றி நீர் யாது கருதுகின்றீர்? (20 புள்ளிகள்)
5. பிரிந்த மகவைக் காண் படலத்தில் அவலச் சுவையும் உவகைச் சுவையும் வெளிப்படுமாற்றையும் அவற்றினூடாக யேசுநாதரின் சிறப்புக்கள் பேசப்படுமாற்றையும் எடுத்துக் காட்டுக. (20 புள்ளிகள்)
6. செய்நம்புநாச்சியார் மான்மியம் அக்காலச் சமூக நிலையை விமர்சனத்திற்கு உட்படுத்தும் முறை பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)
7. பிச்சமூர்த்தி கவிதைகளின் பொதுவான பண்புகளை எடுத்துக் கூறி விளக்குக. (20 புள்ளிகள்)
8. மஹாகவியின் ஒரு சாதாரண மனிதனின் சரித்திரத்தில் சித்திரிக்கப்பட்டுள்ள மத்தியதர வர்க்கத்தினரின் சாதாரண மனித இயல்புகளை எடுத்துக் காட்டுக. (20 புள்ளிகள்)